# பதுளை பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பதுளை பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதுளை பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 678,400 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 561,289 ஆக இருந்தது

அல்லது கேளவிப் பெட்டிக்குள் போடப்பட்டமைக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்படாமை மற்றும் கூறுவிலைகளில் அலுவலக திகதி முத்திரை இடப்படாமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 நவம்பர் 11 ஆந் திகதிய 12/அ/15/1 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் தலைவருக்கு அங்கீகரிக்கப்பட்ட மாதாந்த எரிபொருள் அளவான 222 லீற்றர் டீசலினை விஞ்சி 2012 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலத்தில் 2111 லீற்றர் டீசலுக்காக ரூபா 242,334 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(i) ஆம் பிரிவின் பிரகாரம் ஊழியர்களைச் சேர்க்கும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரம் பெறப்படாமல் நாட்கூலி அடிப்படையில் சேர்க்கப்பட்ட 25 ஊழியர்களுக்காக நியமனங்கள் வழங்கப்பட்டு 2012 ஆம் ஆண்டில் அந்த ஊழியர்களுக்காக ரூபா 3,065,357 தொகை சம்பளம் மற்றும் படிகள் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.4 செயற்பாட்டு/ முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) 2012 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊவா மாகாண சபையின் கொள்கைத் திட்டமிடல் வளத் திணைக்களத்தினால் நெலும்கம தொடக்கம் கொவிபல வரை பிவ்சென நடைபாதையின் படிக்கட்டுக்களை அமைப்பதற்காக 2012 யூலை 20 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 50,000 தொகை அந்நிர்மாணங்கள் நிறைவேற்றப்படாமையின் காரணமாக 2012 திசெம்பர் 12 ஆந் திகதி கொள்கைத் திட்டமிடல் வளத் திணைக்களத்திற்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்பட்டு அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 70,145 தொகையான நிறுத்தி வைத்தல் வரி அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.